2003 நவம்பர் 6]

திரு. கு. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 62, திரு. சோ. இராசேந்திரன், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

62—

நினைவுச் சின்னம்

***32886—திரு. சோ. இராசேந்திரன்:**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எட்டயபுரம் அருகிலுள்ள பிதப்புரம் கிராமத்தில் மகாகவி ,பாரதியாரின் தந்தையாரால் தொடங்கப்பட்ட நூற்பாலை இருந்த இடத்தை அரசு கையகப்படுத்தி நினைவுச் சின்னமாகப் பராமரிக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்கள் இந்த எளிய விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த தொண்டனுக்கும் தன்னுடைய அமைச்சரவையிலே செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சராகப் பணியாற்றுகிற வாய்ப்பை உருவாக்கிக் கொடுத்தமைக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களில் என்னுடைய நன்றியைக் காணிக்கையாக்கிக் கொள்கிறேன், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இந்த வினா எழ வாய்ப்பில்லை.

முற்பகல் 10-05

திரு. சோ. இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகாகவி சுப்பிரமணிய பாரதியார் அவர்களுடைய தந்தையார் சின்னசாமி ஐயர் அவர்களால் ஒரு Ginning factory ஆரம்பிக்க வேண்டுமென்ற நோக்கிலும், அந்தப் பகுதியிலே வேலைவாய்ப்பை உருவாக்க வேண்டும் என்ற அடிப்படையிலும், பங்கு ஒன்றுக்கு ரூபாய் 100/- வீதம் வசூல்

செய்து, கிட்டத்தட்ட 198 பங்குகள் வசூல் செய்து, எட்டயபுரம் Bharathi Ginning Factory என்ற பெயரில், 1882 ஆம் ஆண்டு நூற்பாலை தொடங்கப்பட்டது. 1893 ஆம் ஆண்டு ஜனவரி 25 ஆம் தேதியன்று எட்டயபுரம் அருகிலுள்ள பிதப்புரம் கிராமத்திலே மகா சபை கூடி முடிவு செய்யப்பட்டது. 1894 ஆம் ஆண்டு அன்றைய பிரிட்டிஷ்காரர்களால் கடம்பூர், சாத்தூர் போன்ற பகுதிகளிலே ginning factories ஆரம்பிக்கப்பட்ட காரணத்தினால், அன்றைய சூழ்நிலையில் ginning factory -ஐத் தொடர்ந்து நடத்த முடியாத சூழ்நிலை ஏற்பட்டதன் காரணமாக, 1895 ஆம் ஆண்டு மகாகவி சுப்பிரமணிய பாரதியார் அவர்களுடைய தந்தை ஏற்படுத்திய அந்த ginning factory மூடப்பட்ட சூழ்நிலையில், வரலாற்றுச் சிறப்புமிக்க எட்டயபுரம் பகுதியிலே உள்ள அந்த நிலத்தை அரசு கையகப்படுத்தி, பெண்களுக்கான தொழிற்சாலை, வேளாண் துறை சம்பந்தமான தொழிற்சாலை நிறுவுவதற்கு பரிசீலனை செய்யுமா என்பதை தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகாகவி பாரதியார் அவர்தம் நினைவாக சென்னை திருவல்லிக்கேணியில் அவர் வாழ்ந்த வீடு நினைவிடமாக்கப்பட்டுள்ளது. எட்டயபுரத்திலுள்ள தூத்துக்குடி சாலையில் பாரதி மணிமண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. அதே எட்டயபுரத்திலே பாரதி சாலையிலே பாரதி இல்லம் அமைக்கப்பட்டுள்ளது. பாரதியார் கல்லூரி மற்றும் பாரதியார் பல்கலைக்கழகமும் அமைக்கப்பட்டுள்ளன. மகாகவி பாரதியாருக்கு சென்னை கடற்கரைச் சாலையிலே முழு உருவச் சிலை அமைக்கப்பட்டுள்ளது. மற்றும் அவரது பிறந்த நாளையொட்டி ஒவ்வொரு ஆண்டும் அரசின் சார்பில் அவர் பிறந்த நாளான டிசம்பர் மாதம் 11 ஆம் நாள் பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டு வருகிறது. இவற்றைத் தவிர, இப்பொழுதுள்ள அரசின் நிதிநிலை நெருக்கடியில் எட்டயபுரம் அருகிலுள்ள பிதப்புரம் கிராமத்திலுள்ள மகாகவி பாரதியாரின் தந்தையால் தொடங்கப்பட்ட நூற்பாலை இருந்த இடத்தை அரசு கையகப்படுத்தி, மேலும் தொழில் தொடங்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 63, திரு. இ.ஏ. லியாவுதீன் சேட், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.